**சரியான விடை +2அரையாண்டுத்தேர்வு டிசம்பர் 2017**

1.(a) கூட்டுப்பங்கு நிறுமம்
2.(b) இயக்குநரவையிடம்
3.(a) விரைவாக
4.(b) வெளிப்படை ஆணையுரிமை
5.(a) 6%
6.(இ) 18
7.(a) முதல்வர் மற்றும் முகவர்
8.(இ) 7
9.(ஆ)பங்குகளின் மீதான செலுத்தப் பெறாதமதிப்பு
10(b) ரூ5000000க்கும் கூடுதலாக இருக்கும் நிறுமம
11.( b) 15
12.(a) நிகரலாபத்தில் 11 விழுக்காடு
13.(a) நிகழ்ச்சி நிரல்
14.(a) பொது விடுப்புகள்
15.(d) பட்டியலிடுதல்
16.(c) தகவலறிக்கை
17.(b) மாவட்டத் தலைநகரங்களில்
18.(c) சரக்குகள்
19.(c) இந்திய நிறுமச் சட்டம் 1956
20.(d) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. ஒப்படைத்தல்
22. தனியாள் வணிகம்
23. வரையறுக்கப்படாதது
24. கூட்டாண்மைக் கலைப்பு
25. வரையறாப் பொறுப்பு
26. சமமாக
27. குவி முன்னுரிமைப் பங்குகள்
28. 2
29. பங்கு ஒறுப்பிழப்பு
30. வரையறுக்கப்பட்டது
31. செயல்முறை விதிகளில்
32. உரிமையாளர்கள்
33. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில்
34. உடைமை
35. 5%
36. 21
37. வரையறை இல்லை
38. மக்களாட்சித்
39. பொது நிறுவனம்
40. பொதுச் சேவை / பொது நலன்

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41. பொதுக்கூட்டுரு:** பாராளுமன்றத்தில் தனிசச்டட்த்தின் மூலம் உருவாக்கப்படும் அமைப்பு ஆகும். தனிச்சட்டத்திலேயே இதன் நோக்கம் அதிகாரங்கள் பணிகள் ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும். இது ஒரு சட்டமுறைக்கழகம் ஆகும். (எ.கா) இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம், யூனிட்டிரஸ்டு ஆப் இந்தியா, இந்திய தொழில்நிதிக்கழகம்.

**42. தனியாள் வணிகம்:** தனிநபரால் தனிநபருக்கென்று அமைக்கப்பட்டு இயங்கும் ஒரு வணிகம் தனியாள் வணிகம் என்று டாக்டர் ஓ.ஆர் கிருஷ்ணசாமி கூறுகிறார்.

**43.கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகள் :** தனியாள் வணிகம், இந்துக் கூட்டுக்குடும்பம், கூட்டாண்மை

**44கூட்டு மற்றும் தனிப்பொறுப்பு:** கடனீந்தோர் தங்களுக்கு சேரவேண்டிய தொகையை அனைத்து கூட்டாளிகளின் தனிச் சொத்துக்களிலிருந்து பெறுவது - **கூட்டுப்பொறுப்பு** ஏதேனும் ஒரு கூட்டாளியின் தனிச் சொத்தின்மீது வழக்கு தொடுத்து பெறுவது – **தனிப்பொறுப்பு**

**45. கூட்டாளிகளிடையே நிலவும் உறவு முறை:** முதல்வர் மற்றும் முகவர் உறவு. ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும் முகவர்களாகவும் செயல்படுகின்றனர்.

**46. கடனீட்டுப் பத்திரம் :** நிறுமம் நீண்டகாலக் கடன்களைத் திரட்டும் வழிகளுள் மிகவும் பயன்படுத்துவது கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடும் முறைதான். ஒரு கடனை ஒப்புக்கொள்ளும் (அ) கடனை ஏற்படுத்தும் ஒரு ஆவணமே கடனீட்டுப் பத்திரம் என்று கூறப்படுகிறது.

**47. பங்குகளை வட்டத்தில் வெளியீடுதல் :** பங்குகளை அவற்றின் முகமதிப்பிற்கும் குறைத்து வெளியிடப்படுதல் வட்டத்தில் வெளியிடுதல் ஆகும். உ-ம் பங்கொன்றின் முக மதிப்பு ரூ10 எனவும் அது ரூ 8 க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்குவெளியீட்டு தள்ளுபடிரூ2 ஆகும்.

**48. நிகழ்ச்சி நிரல்:** கூட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளின் வரிசையே நிகழ்ச்சி நிரல் என்று கூறப்படுகிறது. கூட்டத் தலைவருடன் கலந்துரையாடி, நிறுமச்செயலர் நிகழ்ச்சி நிரலைத் தயார் செய்கிறார்.

**49. சிறப்புத் தீர்மானம் :** சிறப்புப் பொருள் குறித்து நிறைவேற்றப்பட வேண்டியது. 4ல் 3 பங்கு உறுப்பினர்கள் ஆதரித்து இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும்.

**50:குறுமப்பங்கொப்பம்:** பொதுநிறுமத்தில் தகவலறிக்கையில் குறிப்பிட்டுள்ள குறுமப்பங்கொப்பம் பெறுவது சட்டப்படி கட்டாயமாகும் (அதாவது வெளியிட்டுள்ள பங்குகளில் 90% அளவிற்காவது).

**51. பத்திரம்:** ஒரு பத்திரம் என்பது ஒருவரின் உடைமை உரிமை அல்லது கடனீட்டு உரிமையை குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஆவணம் ஆகும். எ.கா. பங்குகள், கடனீட்டுபத்திரம்.

**52.கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் 4 சிறப்பியல்புகள் : 1.தன்னிச்சையாக சேரும் சங்கம்:** பலர் தன்னிச்சையாக சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும்.இவ்வமைப்பில் உறுப்பினராக சோருமாறு ஒருவரை கட்டாயபடுத்த முடியாது.ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இச் சங்கத்தில் சேரலாம் விலகலாம். **2.சமத்துவம்:** கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சமம்.எல்லா உறுப்பினர்களுக்கம் சமஉரிமை உண்டு.அதிகமான முதலீடு ஒருவர் அளிக்கும்

காரணத்தால் அதிக உரிமை அவருக்கு கிடையாது. **3.வளங்களின் இணைப்பு:** இந்த அமைப்பில் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருங்கிணைக்கப்படுகிறது.அவர்களட எல்லா உறுப்பிநர்களின் நரனுக்காக இதை பயன்னடுத்தகின்றனர். **4.ஒருமுனைபடுத்திய முயற்சி:** இந்த அமைப்பில் எல்லாத் தனிநபர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர்.கூட்டுறவு அமைப்பின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக 5.பன்மர் உறுப்பினராதல் : 6.நிதி : 7.அரசியல் செல்வாக்கு இல்லை: 8.பரஸ்பர உதவி: 9.சட்டமுறை தணிக்கை: 10.ஊக வணிகம் இல்லை: 11.மக்களாட்சி முறையில் மேலாண்மை 12.சேவையின் தத்துவம் 13.சட்டத் தகைமை 14.உறுப்பினராவதற்க்கு தடையில்லா வாய்ப்பு 15.முதலுக்கு சொற்ப வருவாய் 16.உள்ளுர் உறுப்பினர்கள் 17.மாநிலஅரசு கட்டுப்பாடு 18.உபரிபகிர்வு 19.பதிவு 20.சட்ட உரு 21.பொறுப்பு 22.ரொக்க வியாபாரம் 23.பங்குகளை மாற்ற இயலாமை 24.சட் ஆளுமை 25.முறையான பயிற்சி

**53. கூட்டுறவு நாணய சங்கத்தின் நோக்கங்கள்:** இது உறுப்பினர்களுக்கு குறுகிய கால நிதியுதவி அளிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டது. இந்த வழிகளில் உறுப்பினர்களை கடும் வட்டிக்குப் பணம் தரும் கடனீந்தோரிடமிருந்து உறுப்பினர்களைக் காக்கிறது.

**54.இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைவாரி அமைப்பே சிறந்தது :** நாட்டின் பாதுகாப்பு குறித்த ரகசியங்களை தனியார் எதிரி நாடுகளுக்குச் சொல்லிவிடலாம். நெருக்கடி ஏற்படும் போது அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் போகலாம் எனவே இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைவாரி அமைப்பே சிறந்தது

**55.பொதுக் கழகத்தின் மேலாண்மை:** பொதுக்கழகங்கள் இயக்குரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது. தகுதி, திறமை, அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56. ஏதேனும் இரு தனிநபர் அமைப்பு**

**1.தனிவணிகநிறுவனங்கள்** தனிநபரால் உருவாக்கப்பட்டு மேலாண்மை செய்யும் வணிக அமைப்பு தாமேமுதலீட்டு மேலாண்மை செய்து கட்டுப்படுத்தப்படும் வியாபாரஅமைப்பு தனிவணிகரே அனைத்து பணிகளையும் செய்கிறர். தொழிலில் ஏற்படும் இலாபம் முழுவதும் அவரையே சேரும். அதுபோல் நட்டம் முழுவதும் அவரே ஏற்கவேண்டும் தொடங்குவது எளிது. சட்டச்சடங்குகள்ஏதும்இல்லை.

**2.இந்து கூட்டுக்குடும்பம்:** இந்தியாவில் இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பு தலை சிறந்து விளங்குகிறது. இது இந்தியாவில் மட்டுமே உள்ளது. வியாபாரம்: கைத்தொழில்கள் சிறுதொழிற்ச் சாலைகள் போன்றவை.இந்து கூட்டுக் குடும்ப வியாபார அமைப்பின் குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர் 2.குடும்ப தலைவர் மூலம் வியாபாரத்தை நடத்துவர் 2.மிட்டக்சார சட;டத்தின் படி : 1.ஒரு குடும்பத்திலுள்ள ஆண்வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள் .2.இச்சட்டம் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காளம் தவிர இந்தியாவில் பிறபகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது .3.தாயாபாகா சட;டத;தின; படி 1.சொத்தின் உரிமை மாற்றம் கூட்டு வாரிசுதாரரின் வாரிசுகளுக்கு வாரிசு உரிமையின்படி ஏற்படுவதாகும். இது பிறப்பின் காரணமாக அல்ல.2.கூட்டு வாரிசுதாரர் அவரது சொத்தின் பங்கை மற்ற கூட்டு வாரிசுதாரரின் சம்மதமின்றி மாற்றித்தர இயலும்

**57. : கூட்டாண்மையில் இளவர்** கூட்டாளி இளவர் என்பவர் 18 வயது பூர்த்தி அடையாதவர். பாதுகாவலர் நியமிக்கப்பட்டால் 21 வயது வரை இளவராக கருதப்படுகிறார். சட்டப்படி இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட தகுதியில்லாதவர். எனவே அவர் கூட்டாளியாக முடியாது. ஆனால் கூட்டாண்மையின் பயனுக்காக அனைத்துக் கூட்டாளிகளும் ஒப்புக்கொண்டால் இளவர் கூட்டாளியாக முடியும்.

**உரிமை வயதை அடையும் முன் :**

1) தொழிலின் சொத்திலும் இலாபத்திலும் பங்கு பெறும் உரிமை 2) நிறுவனக் கணக்குகளை பாா;வையிட்டு அவற்றை நகல் எடுக்கும் உரிமை 3) தொழிலின் சொத்துகள் இலாபத்தில் அவருக்கு உள்ள பங்கு அளவிற்கு மட்டும் அவருக்குப் பொறுப்பு ஆகும். அவரின் சொத்துகள் பொறுப்பாகாது.

**உரிமை வயதை அடைந்த பின்:**

1) உரிமை வயது அடைந்தபின்பு தொடா;ந்து கூட்டாளியாக இருக்க வேண்டுமா அல்லது விலக வேண்டுமா என்பதை ஆறு மாதத்திற்குள் தீர்மானித்து முடிவை அறிவிக்க வேண்டும். 2) அவ்வாறு ஆறு மாதத்திற்குள் அறிவிக்காவிட்டால் இளவராகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நாள் முதல் நிறுவனக் கடன்களுக்குப் பொறுப்பாவார். 3) ஆறு மாதத்திற்குள் விலகுவதாக அறிவித்தால் அறிவித்த நாளிலிருந்து நிறுவனக்கடன்களுக்கு பொறுப்பாகமாட்டார்.

**58. முறைகேடான ஒதுக்கீடு: அ.** பங்கொன்றின் இயல்மதிப்பில் குறைந்தது 5%அளவிற்காவது விண்ணப்பபணம்பெறாமல் பங்குகளைஒதுக்கீடு செய்தல் அல்லது **ஆ.** தகவலறிக்கை வெளியிட்ட 90 நாட்களுக்குள் குறைந்தளவு பங்கெடுப்பு பெறாதபோதும் பங்குகளைஒதுக்கீடு செய்தல் அல்லது **இ.** பங்கு விண்ணப்பப் பணத்தை அட்டவணை வங்கியில் போட்டு வைத்திருக்காமல் ஒதுக்கீடு செய்தல் அல்லது **ஈ.** தனி ஏற்பாட்டின் மூலம் பங்கு முதல் திரட்டினால் தகவலறிக்கை ஒன்றை நிறுமம் வெளியிடாது. தகவலறிக்கைக்கு மாற்றறிக்கையைத் தாக்கல் செய்யாமலேயே செய்யப்படும் ஒதுக்கீடும் முறைகேடான ஒதுக்கீடாகக் கருதப்படும்.

**59. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் : ஏதேனும் (8)**

1.நிறுமச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை **A** எந்த அளவிற்கு இந்நிறுமத்திற்கு பொருந்தாது என்பதை நிறுமம் தனக்கென வகுக்கும் செயல்முறை விதிகளில் குறிப்பிட வேண்டும்.

2.தொடக்க ஒப்பந்தங்கள் ஏதேனும் இருப்பினும் அவற்றை ஏற்று கொள்ளுதல் அல்லது நிறை வேற்றுதல் குறித்து

3.பங்குமுதல் பங்குகளின் பல்வேறு வகைகள் ஒவ்வொரு வகைக்கும் உள்ள உரிமைகள்

4.பங்குகள் ஒதுக்கீடு பங்குகள் மீது அழைப்பு கோரல் தொடர்பானவை

5.பங்குகள் ஒறுப்பிழப்பு அல்லது பறிமுதல் செய்தல் பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல்

6.பங்குச் சான்றிதல்கள் பங்காணைகள் அனுப்புதல் குறித்து

7.பங்குகள் மாற்றுதல் அல்லது வாரிசு முறை மாற்றம் குறித்த வழிமுறைகள்

8.பங்குகளை பங்கிருப்பாக மாற்றுதல்

9.பங்ககளை அல்லது கடன் பத்திர வெளியீட்டில் ஒப்புறுதியாளர்கட்கு கொடுக்க வேண்டிய தரகுத் தொகை

10.பங்கு முதலை மாற்றி அமைத்தல்

11.இயக்குநர்களை நியமித்தல் அவர்களின் தகுதிகள் ஊதியம் குறித்தவை

12.இயக்குநர்களின் கடன்வாங்கும் அளவு

13.மேலாண்மை இயக்குநர் மேலாளர் செயலர் போன்றோரை நியமித்தல்

14.நிறுமத்தின் பொது இலச்சியினை பயன்படுத்துதல் குறித்த விதிமுறைகள்

15.இயக்குநரவை கூட்டங்கள்

16.பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களின் வாக்குரிமைகள் பகராள்கள் வாக்கெடுப்பு போன்ற விதிமுறைகள்

17.பங்குநர்களின் பல்வேறு வகையான கூட்டங்களை கூட்டி நடத்துதல்

18.பங்கதாயம் வழங்குதல் காப்பு ஏற்படுத்துதல் போன்றவை

19.மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் வெளியீடுகள் குறித்த விதிமுறைகள்

20.நிறுமக் கலைப்பு

**60.சட்டமுறை அறிக்கையில் காணப்பட வேண்டியவை:**

1. ரொக்கத்திற்கு மற்றும் ரொக்கத்திற்கன்றி வேறு மறுபயனுக்காக வெளியிடப்பட்டுள்ள பங்குகள் பற்றிய விவரங்கள்.

2. பங்குகள் மீது பெற்ற மொத்த பணம் மற்றும் பிற வழிகளில் பெற்ற பணம்.

3. அறிக்கை தயார் செய்வதற்கு 7 நாட்களுக்கு முன்புவரை பெற்ற பெறுதல் செலுத்தல் பற்றிய சுருக்கமான கணக்கு.

4. தொடக்கச் செலவுகள் குறித்த மதிப்பீடு அல்லது செலவழித்தவை.

5. கூட்டஒப்புதலுக்காக வைக்கப்படவேண்டியுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் அவற்றில் செய்யவேண்டிய மாற்றங்கள்குறித்த விவரங்கள்.

6. நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்களும் அதற்கான காரணங்களும்.

7. பங்கு அல்லது கடனீட்டுப்பத்திர வெளியீட்டில் இயக்குநர்கட்கு செலுத்தியுள்ள அல்லது செலுத்த வேண்டியுள்ள கழிவு அல்லது தரகுத் தொகை.

8. இயக்குநர்கள் மேலாண்மை இயக்குநர்கள் மேலாளர் செயலர் ஆகியோர் குறித்த விவரங்கள்.

**61. முதலீட்டார் ஊகவணிகர் வேறுபாடு :**

| முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீகளின் மதிப்பை அதிகரிப்பதிலும் லாபம் பெறுவதிலும் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின் மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களை வாங்கி விற்பதின் மூலம் கிடைக்கும் லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையான ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**62.கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக ?** இது பேரளவு சில்லறை வியாபாரஅமைப்பு கூட்டுறவு அமைப்பில் தொடங்கப்படுவது இதில் விற்கப்படும் பொருட்கள் விலைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒரே விலை பேரம் பேச இயலாது. வரைவிலக்கணம ;: சில்லறைவிற்பனைசெய்யும்துறைவாரிஅமைப்பு நான்குஅடிப்படை துறைகளைக் கொண்டது. மளிகைப் பொருள் சுயசேவைப்பிரிவு மாமிசப் பால் பொருள்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருள்கள்விற்பனைசெய்யும்இடம் சலுகைஅடிப்படையில்துறைகளைகுத்தகைக்கு நடத்தும் இடம் என்று M.M.ஜிம்மர்மென் வரையறுக்கிறாா;.

சிறப்பியல்புகள்

1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. பொருட்களில்கலப்படம் தவிர்க்கப்படும்

7.சரியான அளவு எடை குறை என்ற நிலை ஏற்படுவது இல்லை.

8.அரிதான பொருட்கள் கூட இங்கு விற்பனை செய்யப்படும்.

**63.பொதுகழகத்தின் இயல்புகள் : (ஏதேனும் 8)**

**1.தனித்தியங்கும் சட்டத்தன்மை:** இது அதற்கென மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிசட்டத்தால் தோற்றுவிக்கப்படும்.

**2.நீடித்த நிலைத்தன்மை:** இது நிறுமத்தைப்போன்று பொது முத்திரை மற்றும் நிலைத்தன்மையையும்

பெற்றிருக்கும்.தனது பொது முத்திரையின் கீழ் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்.

**3.அரசு முதலீடு:**அதற்கு தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது.சில பொது கழகங்களில் தனியார் முதலீடு செய்யப்படும் நிலையிருந்தால் குறைந்த பட்சம் 51 விழுக்காடு பங்குகளை வைத்திருக்கும். **4.நிதி தன்னாட்சியுரிமை:** அன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையான நிதிக்காக இந் நிறுவனங்கள் அரசை சார்ந்திருப்பதில்லை.தேவைப்பட்டால் பொது மக்களிடம் அல்லது அரசிடம் கடன் பெறலாம்.

**5.நிர்வாகம்:** பொது கழகம் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.தகுதி திறமை அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள். **6.சேவை நோக்கம்:** இது லாப நோக்கு இல்லாமல் சேவை நோக்கை கொண்டு செயல்படும்.அதாவது சரக்கு அல்லது பணியிணை நியமான விலையில் அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது. **7.பணியாளர்கள்:** பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்ல.அக்கழகமே அவர்களின் பணியமர்த்தல் சம்பளம் இன்ன பிறப் பணிகளை தீர்மானிக்கும்.

**8.உரிமை மற்றும் கடமை:** இதைப்படைக்கும் சட்டமே உரிமைகள் கடமைகள் பொறுப்புகள் ஆகியவற்றை தெளிவாக முடிவு செய்யும்.

**9.அரசு தலையீடின்மை:** இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடாது.சுதந்திரமாக தம் கொள்கைக் கழகங்கள் செயல்படுத்தலாம்.

**10.தன்னாட்சியுரிமை:** இக்கழகங்களுக்கு நிதி மேலாண்மையில் தன்னாட்சியுரிமை உள்ளது.இயக்குநரவையால் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுக்காக இந்நிறுவனங்கள் தங்கள் நிதியினை பயன்படுத்தலாம். **11.பதில் சொல்லும் கடமை:** இக்கழகங்களுக்கு பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கும் அத் தொழில் சார்ந்த அமைச்சரகத்திற்கும் பதில் சொல்லும் படமை உண்டு. **12.தொழில்கடமை:** லாபம் ஈட்டுவது முதன்மை நோக்கம் இல்லாமலிருப்பினும் கழகங்கள் தொழில் கண்ணோட்டத்தோடு இயங்குகின்றன.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64)அ)பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது?அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.**

பன்னாட்டு நிறுமம் என்ற சொல் இரண்டு பதங்களை கொண்டுள்ளது

பன் என்பது பல அல்லது அநேக எனடபதை குறிக்கும்

நாடு என்பது பல தேசங்களைக் குறிக்கும்.

எனவே பன்னாட்டு நிறுமம் என்பது பல நாடுகளில் அயங்வரும் நிறுமமாகும்.

இந்த நிறுமங்களுக்கு தொழிற்சாலைகளும் அலுவலகக் கிளைகளும் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருக்கும்

ஏல்லாவகையான வியாபார அமைப்பு ஒரு நாட்டு அரசின் எல்லையை தாண்டிச் சென்றால் அது பன்னாட்டு நிறுமம் எனப்படும்.

இதை உலக அளவில் பலமிக்கவன் (அ)உலக வியாபாரம (அ)பன்னாட்டு வியாபாரம் எனப்படும்.

**வரைவிலக்கணம் :**

ஐக்கிய நாட்டுக் குழுவின் கூற்றுப்படி பன்னாட்டு நிறுமம் என்பது எந் நாட்டில் உருவாக்கப்பட்தோ அதைவிட கூடுதலாக பல நாடுகளில் கூட்டுருவாக்கம் பெற்றிருப்பதே ஆகும்.

**சிறப்பியல்புகள் :**

1.ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்.

2.இது உலக அளவில் பெரியது.

3.இது அயல் நாடுகளில் உள்ள கச்சா பொருட்கள் பணியாட்கள் சந்தை ஆகியவற்றை பயன்னடுத்திக் கொண்டு போக்குவரத்துச் செலவை குறைக்க முற்படும்.

**பிற செய்திகள் :**

- உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் இன்று செயல்படுகின்றன.
- இதில் சரிபாதியாக அமெரிக்காவிலும் மீதி பிற நாடுகளில் காணப்படுகின்றன.
- அமெரிக்காவில் தலைமையிடமாக கொண்டுள்ள பன்னாட்டு நிறுமங்கள் அயல் நாட்டு முதலீட்டை நேரடியாக பெறுகின்றன.
- பின்தங்கிய நாடுகளில் முதலீடுகளும் பணியிடங்களும் 13 நாடுகளில் பன்னாட்டு நிறுமங்கள் ஏற்படுத்தி உள்ளன.
- அவைகள் பிரெசில் கங்காங் மெக்ஸிகோ சிங்கப்பூர் (ம)தென் கொரியா போன்றவை
- பன்னாட்டு உழைப்பாழர் சங்க அமைப்பின் கூற்றுப்படி அமெரிக்காவில் 60 நிறுமங்கள் வேலை வாய்ப்பை வளரும் நாடுகளில் உருவாக்குகின்றன.ஆசிய நாடுகளில் 30 நிறுமங்களும் ஆப்ரிக்க நாடுகளில் 10 நிறுமங்களும் உள்ளன.
- எடுத்துக்காட்டுகள் :
  - ✓ யூனிலிவர் லிமிடெட் - பிரிட்டிஸ் நிறுமம்
    இந்தியாவில் இந்துஸ்தான் லிவர் லிமிடெட் என்ற துணை நிறுமம் பெற்றுள்ளது.
  - ✓ யூனியன் காாபைட் - அமெரிக்க நிறுமம்
    இது இந்தியா உட் பட பல நாடுகளில் துணைநிறுமங்களை பெற்றுள்ளது.
  - ✓ இண்டர்நேஷனல் பிசினஸ் மிசின் -அமெரிக்க நிறுமம்
    புல நாடுகளில் துணை நிறுமங்களைக் கொண்டுள்ளது.
  - ✓ பிலிப்ஸ் - டச்சு நிறுமம்
    இந்தியாவில் பிலிப்ஸ் இந்தியா என்னும் துணை நிறுமம் உள்ளது.

✓ கோகோ கோலோ கழகம் - அமெரிக்க நிறுமம் புல நாடுகளில் உற்பத்தி செய்துவிற்பனை செய்யப்படுகிறது

**64.ஆ) துறைவாரி அமைப்பின் நிறைகள்:**

1. முழுமையான அரசு கட்டுப்பாடு: அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குபவை, எனவே, செயல்பாடுகளை சரியான வழியில் கட்டுப்படுத்த முடியும்.

2. மேலாண்மை: அரசு அலுவலர்கள் மேலாண்மை செய்வதால் உண்மையாகவும் திறம்படவும் உழைப்பர்.

3. அரசுக்கு வருவாய் ஈட்டுகிறது: வியாபார நோக்கில் செயல்பட்டு அரசுக்கு வருவாய் பெருக்கி, அது சமூக வளர்ச்சிப் பணிகளுக்காக செலவிடப்படும்.

4. அரசின் கொள்கைகள்: அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்நிறுவனங்கள் செயல்படுத்துகின்றன.

5. இரகசியம் காத்தல்: அணுசக்தி, பாதுகாப்புத் தொழில்களின் கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினை பற்றிய இரகசியங்களை பாதுகாத்து வைக்க இதுவே தகுந்த அமைப்பு.

6. குறிப்பிட்ட தொழில்களுக்கு ஏற்ற அமைப்பு: பொதுச் சேவை சார்ந்த, நீண்ட தொடக்க காலம் கொண்ட தொழில்களுக்கு ஏற்ற அமைப்பு.

7. பதில் சொல்லும் கடமை: செயல்பாடுகளை பற்றி பாராளுமன்றத்திலோ, சட்டப் பேரவையிலோ அது தொடர்புள்ள அமைச்சரகம் பதில் கூற வேண்டும். எனவே, மக்கள் நலன் காக்கப்படும்.

**துறைவாரி அமைப்பின் குறைபாடுகள்:**

1. அரசு தலையீடு: கொள்கைகளை அரசு தலையீடின்றி சுதந்திரமாக அமைக்க முடிவதில்லை. மேலும், அரசு தலையீடு, முடிவுகள் எடுப்பதில் கால தாமதத்தை ஏற்படுத்துகிறது.

2. தகுதிவாய்ந்த அலுவலர் இன்மை: வணிக கண்ணோட்டம் அற்ற, தொழில் நுட்பமறியா அரசு அலுவலர்களே பொறுப்பிற்கு வருகின்றனர்.

3. மைய அதிகாரம்: தொழில்துறை காரணங்கள் புறக்கணிக்கப்பட்டு நெகிழ்வற்ற, மரபுமாறா நடைமுறை பின்பற்றப்படுகிறது.

4. தாமதம்: அரசியல் தலையீடு, மைய அதிகாரம் இவைகளால் இத்துறை செயல்பாடுகளில் தாமதம் ஏற்படுகிறது.

5. வரிச்சுமை: இத் தொழில் நிறுவனங்களில் ஏற்படும் நட்டம் காரணமாக அதை ஈடுசெய்ய அரசு பொதுமக்களுக்கு மேன்மேலும் வரிவிதிக்கலாம்.

**65.அ) தனிவணிகத்தின் நன்மைகள் ஏதேனும்10 :**

**1.நன்மைகள் : 1.எளிதான அமைப்பு :** தனியாள் வணிகத்தை சட்டச் சிக்கல்கள் ஏதுவுமின்றி துடங்கலாம். ஒப்பந்தம் பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவையில்லை.

**2.நேரடி ஊக்குவிப்பு :** 1.வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனியார் வணிகத்தைச் சாரும். எவருடன் ஒப்பிட்டுக் கொள்ளத் தேவையில்லை.

**3.நெகிழ்ச்சி தன்மை :** தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்ச்சி தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். தனியாள் வணிகத்தை மாற்ற எவ்வித செலவுகள் இல்லாமலும் எளிதில் மாற்றிக்கொள்ளலாம்.

**4.வியாபார ரகசியங்களை காத்தல் :** வியாபார வெற்றிக்கு தொழில் ரகசியங்களை காத்தல் அவசியம். தனியாள் வணிகத்தில் ஒருவர் மட்டும் என்பதால் வியாபார ரகசியங்களை காக்க இயலும். **5.விரைவான முடிவு :** தனியாள் வணிகத்தில் ஒருவர் வேறுஉரிமையாளர் இல்லை எனவே அவர் காலதாமதமின்றி விரைவாக முடிவெடுக்கலாம்

**6.அதிக வெகுமதி :** தனியாள் வணிகத்தில் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத்தவரினால் நட்டம் பொருளாதார சிக்கனம் ஆகிய நன்மைகளை தனியாள் வணிகருக்கு சாரும். **7.அதிக நிதி தரமதிப்பீடு** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. சொந்த சொத்துகளில் இருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.அதனால் பலர் கடன் தரமுன்வருவார்.

**8.சுய வேலைவாய்ப்பு :** குறைந்த மூலதன முடைய பலருக்கும் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. அடிமைத்தொழில் செய்ய விரும்பாத நபர்களுக்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

**9.ஆளுமை வளர்ச்சி :** தன்னம்பிக்கை தொழில் தொடங்கும் முயர்சி பொறுப்புணர்ச்சி சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்றவை வளர்கிறது.

**10.எளிமையாக கலைப்பு :** .கலைப்பது மிகவும் எளிது. விரும்பிய போது எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லாமல் கலைக்கலாம்.

**65.ஆ) பகராள்:** நிறுமக்கூட்டத்தில் கலந்துகொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரை குறிக்கும். பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

**ஆ) குறைவெண் :** ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க வருகைதர வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கையே குறைவெண் ஆகும்.

**(இ) நிகழ்ச்சி குறிப்பேடு:** நிறுமமொன்றின் பல்வகையான கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் **எடுக்கப்பெற்ற முடிவுகளின் (தீர்மானங்களின்) உண்மையான, சரியான பதிவுகள்தான்** நிகழ்ச்சிக் குறிப்பு எனப்படுகிறது. சுருக்கமாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும். **(ஈ)மாற்று இயக்குநர் :** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருக்குமாயின் இயக்குநர் ஒருவர் தொடர்ந்து மூன்று மாதங்கள் வெளி மாநிலத்திற்கு சென்றிருந்தால் அவருக்கு பதிலாக இயக்குநரவை மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்கும் அந்த நபரே மாற்று இயக்குநர் ஆவார்.

**66)அ)**

| கூட்டாண்மை | தனியாள்வணிகம் |
|---|---|
| இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்,1932 நெறிப்படுத்துகிறது | தனிச் சட்டம் ஏதுமில்லை. |
| குறைந்த அளவு இரண்டுபேர். அதிக அளவு வங்கித் தொழில் எனில் 10 பேர்,இதர தொழில் எனில் 20 பேர். | ஒருவர் மட்டுமே |
| இது உடன்பாட்டால் உருவாக்கப்படுகிறது. | உடன்பாடு அவசியம் இல்லை. |
| பதிவு கட்டாயம் இல்லை | பதிவு தேவையில்லை |
| கூட்டாளிகளிடம் உரிமையும் கட்டுப்பாடும் உள்ளது | தனியாள்வசம் உள்ளது. |
| அனைத்து கூட்டாளிகளுக்கும் மேலாண்மையில் பங்கேற்க உரிமை உண்டு. | தனி நபரால் மேலாண்மை செய்யப்படுகிறது |
| இதில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் முதலிடுகிறார்கள். | ஒரு நபர் மட்டும் முதலிடுவார். |
| கூட்டுப்பொறுப்பு. | தனி நபர் பொறுப்பு. |
| ஒவ்வொருகூட்டாளியும் கூட்டாண்மையின் முதல்வராகவும் மற்ற கூட்டாளிகளின் முகவராகவும் கருதப்படுகிறார். | தானே முகவராக செயல் படலாம் அல்லது ஒரு முகவரை நியமித்துக் கொள்ளாம். |
| ஒப்புக்கொண்ட விகிதத்தில் இலாபம் அல்லது நட்டத்தை பகிர்ந்து கொள்வார்கள். | இலாபப் பகிர்வு இலாபம் அல்லது நட்டத்தை ஒருவரே ஏற்கவேண்டும். |

**66ஆ) கடனீட்டுப்பபத்தரங்களின் வகைகள்**

**1. பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரங்கள்** குறிப்பிட்ட நபர் அல்லது நபர்கள் பெயர்களில் வெளியிடப்பட்டு, கடனீட்டுப் பத்திரதாரர்கள் பெயர்கள் நிறுமம் வைத்திருக்கும் கடனீட்டுப் பத்திரப்பதிவேட்டில் இடம் பெற்றிருக்குமாயின், அத்தகைய கடனீட்டுப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரங்கள் என்றழைக்கப்படுகின்றன.

**2. கொணர்பவர் கடனீட்டுப் பத்திரங்கள்:** கடனீட்டுப் பத்திரத்தை யார் கொண்டு வருகிறாரோ அவருக்குச் செலுத்தத் தக்க பத்திரங்கள் இவை. அன்னாரின் பெயர் கடனீட்டுப் பத்திரப் பதிவேட்டில் இடம் பெறுவதில்லை.இவை வைத்திருப்போர் கடனீட்டுப் பத்திரங்கள் என சொல்லப்படுகின்றன. **3. பிணைக் கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது அடைமானக் கடனீட்டுப் பத்திரங்கள்:** நிறுமத்தின் முழுச் சொத்துக்களை அல்லது அவற்றுள் ஒரு பகுதியை அடைமானமாக்கி அல்லது அவற்றின் மீது பிணையாகப் பொறுப்பு ஏற்படுத்தி வழங்கப்படும் கடனீட்டுப் பத்திரங்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. நிலம் மற்றும் கட்டிடங்கள் போன்ற குறிப்பிட்ட நிலைச் சொத்துக்களை ஈடாக அடைமானம் செய்யப்பட்டிருப்பின், அது குறிப்பிட்ட பொறுப்பு எனப்படும். **4. பிணையற்ற அல்லது வெற்றுக் கடனீட்டுப் பத்திரங்கள்** நிறுமம் தன் சொத்துக்களை ஈடாகக் காட்டாமல், அவற்றைப் பிணையாக ஏற்படுத்தாமல் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் பிணையற்ற அல்லது வெற்றுக் கடனீட்டுப் பத்திரங்கள் எனக் கூறப்படுகின்றன.**5. மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள்** குறிப்பிட்ட காலக்கெடுவுக்குப் பின் அல்லது நிறுமம் விரும்பியபோது கடனீட்டுப் பத்திரங்களை நிறுமம் மீட்டுக்கொள்ளக் கூடியதாக இருப்பின், அவை மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள் எனப்படுகின்றன.**6.மீள்தகா அல்லது நிலைக் கடனீட்டுப் பத்திரங்கள்** கடனீட்டுப் பத்திரங்களை எப்பொழுதும் மீட்கவே முடியாது, அதாவது இக்கடனை நிறுமம் அடைக்க வேண்டியதில்லை என்ற பொருளை இவை உணர்த்துவதில்லை. இவற்றிற்குரிய பணத்தைப் பட்டுவாடா செய்து மீட்பதற்குக் காலக்கெடு எதுவும் குறிக்கப்படவில்லை **7. மாற்றற்குரிய கடனீட்டுப் பத்திரங்கள்** இவ்வகையான கடனீட்டுப் பத்திரங்கள் இதனை வைத்திருப்போர்க்கு ஒரு மாற்றுரிமையைத் தருகின்றன. அதாவது, குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர், குறிப்பிட்ட விகிதத்தில் இவ்வகைக் கடனீட்டுப் பத்திரங்களைக் கொடுத்துவிட்டு நிறுமத்தின் நேர்மைப் பங்குகளாகவோ முன்னுரிமைப் பங்குகளாகவோ மாற்றிக்கொள்ளலாம். **8. மாற்ற இயலா கடனீட்டுப் பத்திரங்கள்:** தங்கள் கடனீட்டுப் பத்திரங்களைக் கொடுத்துவிட்டு, மாறாக நேர்மை அல்லது முன்னுரிமைப் பங்குகளாக மாற்றிக்கொள்ளக்கூடிய உரிமை, கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு இல்லையெனில், அத்தகைய கடனீட்டுப் பத்திரங்கள் மாற்ற இயலாக் கடனீட்டுப் பத்திரங்கள் எனப்படும்.

**67அ) பங்கு மாற்றகம் இலக்கணம்(ம) இயல்புகள் :**

வேரஸ்டின் கூற்றுப்படி பங்கு மாற்றகம் என்பது வாங்கியவு மற்றும் விற்பவர் ஒரு அடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள் பங்குகளை கையாளும் ஓரிடமே ஆகும்.

இயல்புகள்:

- அது பத்திரங்களை வாங்குதல் விற்பனை செய்தல் போன்ற செயல்கள் நடைபெறும் இடமாகும்.
- பங்கு மாற்றகங்கள் பதிவு பெற்ற அல்லது அவ்வாறில்லாத தன்னிச்சையான சங்கமாகும்.
- பங்கு மாற்றகங்கள் தங்களுக்காக வியாபாரம் செய்வதில்லை.தங்கள் உறுப்பினர்களுக்கு நிறுமப்பத்திரங்களில் வாணிபம் செய்வதற்கான வசதிகளை செய்து வருகிறது.
- பங்கு மாற்றகங்களில் செய்யப்படும் வியாபாரம் கடுமையான சட்ட திட்டங்களுக்குட்பட்டது. ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சட்ட திட்டங்கள் வகுக்கப்படும்.
- ஒவ்வொரு பங்கு மாற்றகமும் தனக்குறிய சட்ட திட்டங்களை உருவாக்கி கொள்கிறது. பங்கு மாற்றகங்களின் சட்டதிட்டங்களுக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

- பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பட்ட பத்திரங்கள் மட்டுமே இங்கு கையாளப்படுகின்றன.நிறுமங்கள் அரக்கட்டளை அரசுகள் நகராண்மை கழகங்கள் போன்றவற்றினுடைய பத்திரங்களும் இங்கு கையாளப்படுகின்றன.
- உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நிர்வாக அமைப்பை தேர்ந்தெடுக்கின்றனர். அவ்வமைப்பு தன் உறுப்பினர்களின் நடவடிக்கைகளைச் சரியான முறையிலும் நேரடியாகவும் தேவையான அளவிலும் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றதாக விளங்குகிறது.
- உறுப்பினர்கள் மட்டுமே பங்கு மாற்றகங்களின் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.18 வயது நிரம்பிய எந்த ஒரு நபரும் பங்கு மாற்றகத்தில் உறுப்பினராக முடியும்
- உண்மையான முதலீட்டாளர்களும் ஊகவணிகர்களும் பங்கு மாற்றகத்தில் பங்குபளை வாங்கி விற்பனை செய்யலாம்.

**67ஆ)கூட்டுறவுச்சங்கள் ஏதேனும் 8 விளக்கத்துடன்**

**நாணய சங்கம்** : 1. வேளாண்மை கடன் சங்கம் 2. வேளாண்மை கடன் சாராசங்கம்

**வேளாண்மை கடன் சங்கம்** 1. கிராமப்புற கடன் சங்கம் 2. பிரதம சங்கங்கள்

**வேளாண்மை கடன் சாரா சங்கம்**

1.நகர வங்கிகள் 2. பணியாளர் சங்கம் 3. தொழிலாளிக் கடன் சங்கங்கள்

**நாணயம் சாரா சங்கங்கள் :** 1.வேளாண்மை சாரா கடன் சங்கங்கள் 2. வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள்

**வேளாண்மை சாரா கடன் சங்கங்கள்**

1.கூட்டறவு சந்தையிடுதல் 2.கூட்டுறவு பண்ணைகள் 3.தொழிற்சாலை கூட்டுறவு

**வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள்**

1.நுகர்வோர் கூட்டுறவு 2.உற்பத்தியாளர் கூட்டுறவு 3.கூட்டுறவு வீட்டு வசதி 4.கூட்டுறவு பண்டகசாலை